சனிக்கிழமை வெளியீடு. திராவிடர் வாரத்தாள் விலை அணா 1½

போர்வாள்

ஆசிரியர்கள் :
காஞ்சி. மணிமொழியார்
ரா. இளஞ்செழியன், B.A. (Hons)

உள்நாடு
ஆண்டு சந்தா ரூ. 5 0 0
6-மாதம் 2 8 0

வெளிநாடு
ஆண்டு சந்தா ரூ. 6 8 0
6-மாதம் 3 4 0

வாள் 3 | சென்னை, திருவள்ளுவர் ஆண்டு 1980 ஆடி 29
20—8—49 சனிக்கிழமை | வீச்சு 1

அன்று வெளிவந்த சிறுகதை!

அந்தச் சம்பவம் அப்படியொன்றும் ப்ரமாதமானதல்ல. வெறும் சம்பாஷணைதான். எனினும் அச்சம்பவத்தை இனிமேல் என் வாழ்நாளில் மறக்க முடியாது.

1942-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 7-ம் நாள் அதிகாலையில் ஒன்றிரண்டு ஜப்பானிய விமானங்கள் சென்னையில் வந்து தங்கள் கைவரிசையைக் காட்டின. உடனே அபாயச் சங்குகள் அலறின. பட்டணம் அல்லோல கல்லோலப்பட்டது. சென்னையிலிருந்து புறப்படும் புகை வண்டிகளிலும் மோட்டார் பஸ்களிலும் இட நெருக்கடி ஏற்பட்டது. சென்னையிலிருந்து வெளியூர்களுக்குப் போகும் சாலைகளில் இரட்டை மாட்டுக் கூண்டுவண்டிகள் அந்தந்த வீட்டுச்சாமான்களுடன் எறும்புச் சாரைகள்போல் நகர்ந்தன. சென்னை சர்க்காரே தங்கள் காரியாலயங்களை வெளியூர்களுக்கனுப்பிவிட்டார்கள் என்றால், சாமானிய மக்களைப் பற்றிக் கேட்கவேண்டுமா?

இப்படியாக, எங்கள் குடும்பத்தினர் அடைக்கலம் புகுந்த ஊர் திருப்பதி. அங்கே அக்காலத்தில் என்றுமில்லாதபடி வீடுகளுக்குக் கிராக்கி ஏற்பட்டது. நாங்கள் ஆறு மாதக் குடிகூலியை முன்பணமாகக் கொடுத்து ரெயில்வே ஸ்டேஷனுக்கருகிலுள்ள ஒரு தெருவில் ஒரு தனி சிறு வீட்டை எடுத்துக்கொண்டு வசிக்க ஆரம்பித்தோம். அந்த ஊர் எங்களுக்குப்பிடித்தமாவதற்கும் நாங்கள் ஆற அமர ஒருவகையாவதற்கும் சுமார் ஒரு வாரக் காலம் பிடித்தது. அதற்குப் பிறகுதான் எங்களைச் சுற்றிப்பார்க்கத் தலைப்பட்டோம்.

எங்கள் வீட்டுக்கு எதிர் வீடு பார்ப்பனர்களுடைய வீடு. திருப்பதியில் பார்ப்பனர்கள் என்றால், அநேகமாக வைணவப் பார்ப்பனர்களாகத் தானே இருக்கமுடியும்? அந்த வீட்டிலிருந்து தினந்தோறும் மாலை ஐந்தரை மணிக்கு நாற்பது வயதென்று மதிப்பிடத்தக்க ஒரு ஐயங்கார் பார்ப்பனரும் பதினாறு வயதிருக்கக் கூடிய அவளுடைய மகளும் வெளியே வந்து உலாவச் செல்வது வழக்கம். நான் பிறகு விசாரித்து அறிந்துகொண்டதில், அவர்கள் அன்றாடம்மலையடிவாரத்துக்கும் எப்போதாகிலும் கோயிலுக்கும் போவார்களென்று தெரிந்து கொண்டேன்.

அவ்விருவரில் எங்கள் கவனத்தை அதிகமாக இழுத்தவர் அந்தப் பார்ப்பனர்தான். ஏனென்றால் அந்தப் பெண் தனது வயதுக்கேற்ற உடையணிந்து சற்று அடக்கமாகவே காணப்பட்டாள். அவர்தான் மிக்க நாகரிகமாகக் காணப்பட்டார். இப்படிச் சொல்வதைவிட, தாம் நாகரிகமானவர் என்று பிறர் நினைக்கவேண்டுமென்று ஆசைப்படுவதுபோல் காணப் பட்டார் என்று சொல்வது அதிகப் பொருத்தமுடையதாகும்.

அவருடைய அலங்காரத்தைப் பாருங்கள்; கன்னங்கரேலென்றிருக்கும் மயிர்க்குடுமி. முத்துப்போன்ற பல்வரிசை, நெற்றியிலே பட்டையாயிராமல் நாகரிகமாய் மெல்லிசாக தீட்டப்பெற்ற சிவப்புக் கோடு. அவர் எத்தனை மணிக்கொருதரம் முக க்ஷவரம் செய்துகொள்வாரோ, எங்கட்குத் தெரியாது. ஏனென்றால் ஒரு நாளாகிலும் அவருடைய தாடி மயிர் எங்களுக்குப் புலப்படவில்லை. கீழே கிளாஸ்கோ மல் கீழ்ப்பாய்ச்சு, மேலே பட்டு ஷர்ட், அதன்மேல் மெல்லிய 'ஜரிகை' போட்ட விசிறி மடிப்பு அங்கவஸ்திரம். வைரக்கடுக்கன், விளிம்பில்லாத மூக்குக் கண்ணாடி, கை விரல்களில் மோதிரங்கள், இடது மணிக்கட்டில் தங்கக் கைக்கடிகாரம், வலக்கையில் தந்தக் கைப்பிடியும் வெள்ளிப்பூண்களும் போட்ட மெல்லிய பிரம்புத்தடி, காலில் ரங்கூன் செருப்புகள்! 'கும்' என்று வீசும் மகிழம்பூ அத்தர் வாசனை அவர் வருகிறாரென்பதை முன்னதாகத் தெரிவிக்கும்!

தனது மகளோடு உலாவச் செல்

(5-ம் பக்கம் பார்க்க)

வேடிக்கைப் படமல்ல! வேதனையின் உருவ

இதயத்தைத் தாக்கும் ஈட்டிமுனைகள்!

டில்லி தேவதைகளின் பஞ்ச பாணங்கள்!

மத்திய சர்க்கார் மனம் வைத்தால்...,



மாகாண சட்டசபைகளைப் பூட்டிவிட்டு

மாகாண மந்திரி சபைகளை ஒழித்துக் கட்டிவிட்டு

மாகாண கவர்னர்கள அதிகாரங்களை அழித்த



மாகாண மக்களின் உரிமைகளை முற்றிலும் நசுக்கிவிட்டு

மாகாண கோர்ட்டுகளின் அதிகாரங்களையும் பறித்து விட்டு

ஜாம் ஜாமென இந் முழுவதையும் தாங்கே யாட்சி செலுத்தமுடி

வேடிக்கைப் படமல்ல இது வேதனையின் உருவம்!

கேலிக்காகவோ கிண்டலுக்காகவோ தீட்டப்பட்ட ஓவியம் அல்ல, உண்மை நிலையைக் கண்டு உள்ளம் புழுங்கிக்கிடக்கும் ஜனநாயகவாதிகள், இந்தியாவே— கண்டதுமே கண்கள் க

(12-ம் பக்கம் பார்க்

துசரி! ஆனால், இது?

ந்த மாபெரும் தலைவர் எட்டு டுகளாக வெஞ்சிறையில் து வாடுகின்றார்! கேட்பா டா?

ருக்கு விடுதலையே கிடை ?

ர் சிறையிலேயே கிடந்து வேண்டியதுதானா?

ருடைய கூட்டுத் தோழர்கள் க்கு 10 ஆண்டுகள், 15 டுகள் என்று கடுங்காவல் கப்பட்டிருக்கிறதே, நியா

ர்களெல்லாம் மக்கள் நல ாகப் பாடுபடும் மாபெரும் ர்களல்லவா?

ர்களுக்கா இந்தக் கொடுங் ்னே? அடுக்குமா?

துதான் ஜனநாயகமா?

துதான் முறையா?

லைவர்கள் ஐவர் சொந்த ஊரி ் 6000 மைல்களுக்கு அப் உள்ள ஏதோ ஒரு தீவில் வைக்கப்பட்டிருக்கிறார்களே, மனிதத் தன்மைதானா?

ஆண்டு, 15 ஆண்டு, 20 டு என்று கடுங்காவல் விதிக் ட்டிருக்கிறதே, இது சரியா?

ித தர்மம், நியாயம், ஒழுங்கு , நாகரிகம், நல்லாட்சிப் அத்தனைக்கும் இவை தமாக இல்லையா?

ச்சுரிமை எழுத்துரிமை கூட லயாமே! உள்ளத்தில் எழும் தை ஊராருக்கு உரைப்பதற் உன்னதத் தலைவர்களுக்கு ம இல்லையாமே?

ாடுமை இதைவிட அதிகமாக க முடியுமா?''...

*   *   *

ஹோ! ஆரம்பித்துவிட்டீரோ டைய தாக்குதல் பிரசாரத் தடா! இரண்டு மாத கால 'போர்வாள்', ஆளவந்தார் சாமல் இருக்கிறதே என்று ாகதுதான் எண்ணமிட்டோ ! அதற்குள்ளே தொடங்கி ரா உம்முடைய தூற்றுதல் திலை! ஏனையா ''போர் ' ஆசிரியரே, உமக்கு எங்கள் ாரைத் தூற்றுவிட்டால் தூக் பிடிக்காதோ, ஏனையா கு இந்த விபரீத புத்தி?''

என்றுதான் கேட்கத் தோன்றும் ஜவஹர் சீடர்களுக்கு நாம் மேலே பொறித்துள்ள கேள்விக்குறியீடு களைக் கண்டதும்!

கோபித்துக் கொள்ளவேண்டாம் அன்னை பாரததேவியின் அருமந்த சீடர்களே, இந்தக் கேள்விக் கணை களைப் பூட்டி உங்களைத் திகைக்க வைத்திருப்பவர்கள் ''சூனாமானா பயல்''களல்ல, வகுப்புவாத விஷமிகளும் அல்ல, கம்யூனிஸ்ட் தோழர்கள் அல்ல—சமதர்ம சகாக் களுமல்ல, காங்கிரஸ்காரர்களே தான்!

''அப்படிச் சொல்லுமய்யா, ஆசிரியத் தோழரே அப்படிச் சொல்லும்! பதவி பறிபோனதால் சித்தம் சோர்ந்திருக்கும் பிரகாசம் பந்துலுக்கள் கூறியிருக்கும் இது போன்ற கூறுகெட்ட வார்த்தை களை! அதுகள் இதுபோல் பழி கூறித் திரியாமல் வேறென்ன செய்யும்? எதிர்பார்த்து ஏமாந்தது கள்! பிறர்மீது ஏதேனும் பழி கூறிக்கொண்டிருந்தால் தானே மூக்கறுபட்டு அதுகள் மூலையில் குந்திக்கிடக்கும் அவமானம் மறை யும்? ஆகவேதான் அப்படிக் கூறு கின்றன! இது ஒரு பிரமாதமா?'' என்று கூறித் தப்பித்துக் கொள்ள வும் முடியாது தேசபக்த சிங்கங் களே நீங்கள், இந்த ஐயவினாக்களை எழுப்பியிருப்பவர்கள் பிரகாசம் பந்துலுக்கள் அல்ல, காங்கிரஸ் சர்க்கார்! அதிலும் டில்லி சர்க் கார்!

டில்லி சர்க்காரா! என்னப்பா சரடு திரிக்கிறாய்? சர்க்காரா சர்க் கார்மீதே குற்றப்பத்திரிகை படித் துக்கொள்வார்கள்? செ! செ! ஒரு போதும் இராது என்றுதான் கூறு வீர்கள் நீங்கள். ஆனால், உண்மை! தேசபக்தர்களே நாம் கூறுவது முற்றிலும் உண்மை! டில்லி சர்க் கார்தான் இந்தக் குற்றப்பத்திரி கையை வாசித்திருக்கிறார்கள்!

குற்றப் பத்திரிகையை வாசித் திருப்பவர்களும் சர்க்கார்தான்! குற்றம் சாட்டப் பட்டிருப்பவர் களும் சர்க்கார்தான்!

ஆம்! டில்லி சர்க்கார் **கோவா** சர்க்கார்மீது குற்றம் சாட்டியிருக் கிறது இதுபோல!

இந்தியாவைவிட்டு 'பிரிட்டிஷ் சிங்கம்' இரண்டாண்டுகளுக்கு முன்பு வெளியேறிவிட்டது என்ற போதிலும், வேறு இரு குள்ளநரி கள் இன்னமும் இங்கே இருந்து கொண்டு ஆட்சி புரிந்துகொண்டு தான் இருக்கின்றன—ஒன்று பிரஞ்சு நரி, அதன் ஆதிக்கத்தில் புதுச்சேரி, காரைக்கால், சந்திர நாகூர், மாஹி, ஏனும் ஆகிய ஐந்து இடங்கள் உள்ளன. அது போலவே போர்ச்சுகல் நரி, கோவா டையூ டாமன் ஆகிய மூன்று ஊர்களில் கூடாரம் அடித் துக்கொண்டிருக்கிறது.

போர்ச்சுகீசியரின் ஆதிக்கத்தில் உள்ள **கோவா**வில்தான் பிரஜா உரிமைகள் பறிக்கப்படுகின்றன வாம்! எழுத்து உரிமை மறுக்கப் படுகின்றதாம்! எட்டு ஆண்டு பத்து ஆண்டு என்ற முறையில் உரிமைக் குப் போராடும் உத்தமர்களுக்குக் கடுங்காவல் விதிக்கப்படுகின்ற தாம்! இந்தக் கொடுமையை எடுத் துக்காட்டி இந்திய சர்க்கார் கேட் கிறது இது நியாயமா என்று. நம் மைப் பார்த்துக் கேட்கவில்லை, ஐக்கிய நாடுகளின் சங்கம் என்று அழைக்கப்படும் உலக மன்றம் இருக்கிறதே ஐரோப்பாவில், அந்த மன்றத்தைப் பார்த்துக் கேட் கிறது.

''**டிரிஸ்தான் பிரகன்சா குன்ஹா** என்பவர் கோவா நகர மக்களின் எழுச்சிக் குரல்! சுதந்தர உரிமை கோரி சீறிப் போரிடும் சிங்கம்! அவர் சிறையில் கிடக்கிறாரே தகுமா? எட்டு ஆண்டு கடுங்காவ லாமே, முறையா?'' என்று கேட் கிறது இந்திய சர்க்கார்! உரிமைக் குப் போராடும் உத்தமர்களாகிறார் கள் டில்லி ஆட்சியாளர்கள்!

பேச்சுரிமை இல்லையே—நியா யமா? எழுத்துரிமை அழிக்கப்படு கிறதே—முறையா? ஜனநாயக தத்துவமே சிதைக்கப்படுகிறதே— தகுமா? விசாரணையின்றிக் காவ லாமே—அடுக்குமா? தலைவர்கட் கெல்லாம்சிறைவாசமாமே - மனித தர்மமா என்று கேட்கிறது இந்திய சர்க்கார். கேட்கிறது என்றால் ஏதோ தயவாக தாட்சண்ணிய மாக அல்ல! நியாயமன்றத்தில் நீதி கோரும் முறையில் கேட்கிறது. கோவாவில் ஆட்சி புரியும் போர்த் துகல் சர்க்காரை குற்றவாளிக் கூண்டில் இழுத்துவந்து நிறுத்து கிறது—உலக மன்றத்தின் முன்

"கோவா கொடுமை"களை அம்பலப் படுத்துகிறது— அடிப்படை உரிமைகளையும் பறிக்கிறயே, நாகரீகமா இது என்று முழக்கமிடுகிறது.

"முழக்கம்" நியாயமானது தான், வழக்கு பதிவு செய்யப்படவேண்டியதும் அவசியம்தான். குற்றவாளி, கூண்டில் ஏற்றப்படுவதும் முறைதான். மறுப்பாரில்லை.

இந்திய சர்க்கார், கோவா மக்களின் உரிமைக்காகப் போராடும் உத்தமர்களாகப் பணியாற்ற முன்வந்திருக்கிறர்களே, இந்தச் செயல் நிச்சயம் பாராட்டப்பட வேண்டியதுதான்.

கொடுமை எங்கு நிகழ்ந்தாலும், அது யாரால் செய்யப்பட்டாலும் கண்டிக்கப்பட வேண்டியதுதான்

ஆனல் ஒன்று!

இந்திய சர்க்கார், "உரிமைக்குப் போராடும் உத்தமர்" வேடம் பூண்டிருக்கிறர்களே, ஜனநாயக உரிமைகளைப் பறிக்கிறீர்களே, இது நியாயமா என்று உரத்த குரலில் உலக மன்றத்தில் கேட்க முன்வந்துவிட்டார்களே, இவர்களைப் பார்த்து, கோவா நகரை அடக்கியாளும் போர்த்துகல் ஆட்சியாளர்கள், "ஊருக்கு உபதேசம் புரிய முன்வந்துவிட்டாயே, உன் நாட்டு நிலை என்ன?" என்று கேட்கத் தொடங்கினல் என்ன செய்திடுவர் இந்த டில்லி ஆட்சியாளர்கள்? என்ன செய்ய முடியும் தலையைத் தொங்கப் போட்டுக்கொள்வதைத் தவிர?

என்னென்ன குற்றங்களை போர்த்துகீசிய சர்க்கார் புரிந்திடுவதாகக் குற்றப்பத்திரிகை படிக்க முன் வந்திருக்கிறர்களோ இந்திய சர்க்கார், அத்தனை குற்றங்களையும் அவர்களைவிட அதிகமான அளவில், அவர்களைவிடகூடுதலான வேகத்தில், அவர்களைவிட கன ஜோரான முறையில் ஜாம்ஜாம் எனப் புரிந்துவருபவர்கள்தானே இவர்கள்—இந்த இந்திய சர்க்கார்?

என்ன முகத்தைக் கொண்டு இவர்கள், அவர்களைப் பார்த்து குற்றப் பத்திரிகை வாசிக்க முடியும்?

"பிறர் கண்ணில் இருக்கும் தூசியை அகற்றுமுன்னல் உன் கண்ணில் இருக்கும் தூலத்தை அகற்று" என்ற பழமொழியைக் காட்டி பகடி பேசுமே போர்த்துகல் அரசாட்சி!

அதற்கு என்ன பதில் கூறிடும் இந்த பாரதபுத்திரர்களின் மூவர்ண சர்க்கார்?

என்ன பதில் கூறமுடியும்?

"காங்கிரசின் ஆட்சிக்குட்பட்டிருக்கும் இன்றைய இந்தியாவின் நிலை இதுதான். கொடுங்கோன்மையே உருவான சட்டங்கள் நம்மை அடக்கி யாளுகின்றன—அவற்றிடமிருந்து தப்பித்துக் கொள்ள நமக்கு எந்தவிதப் பாதுகாப்பும் இல்லை,

சர்க்காரின் தான் தோன்றித்தனமான போக்கே நம் வாழ்க்கையைக் கட்டுப்படுத்தி யிருக்கிறது — அந்தப் போக்கிலிருந்து மீண்டுபோக நமக்கு வழி ஏதுமே இல்லை.

விடுதலை ஆர்வத்தையும் உரிமை வேட்கையையும் ஒடுக்குவதற்காக பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் பல கொடுங்கோன்மைச் சட்டங்களை வகுத்தது. தேசிய சர்க்கார் ஆட்சிப்பீடம் ஏறியதும் அந்தச் சட்டங்கள் அவ்வளவையும் அப்படி அப்படியே கையாளத் தொடங்கி விட்டது என்பதுமட்டுமல்ல, உரிமைக் குரலை ஒடுக்குவதற்காக புதுப்புது சட்டங்களை வகுக்கவும் தொடங்கிவிட்டது.

வெள்ளையர் ஆட்சிக்கும் இன்றைய ஆட்சிக்குமிடையே நாம் எந்தவித வேற்றுமையையும் காண முடியவில்லை, அதே போலீஸ் ராஜ்யம்! அதே 144 தடை உத்தரவு! அதே கிரிமினல் திருத்தச் சட்டம்! அதே குண்டாந் தடியடிப் பிரயோகம்! அன்று போலவே இன்றும் நம்மை அடக்கி யாளுவது அன்பு அல்ல—அடக்கு முறைச் சட்டங்களே!

இதுதான் விடுதலை ஆட்சியா? இத்தகு விடுதலை ஆட்சியை அடைவதற்குத்தான நாமெல்லாம் இவ்வளவு அரும்பாடுபட்டோம்?

இந்த நிலையில் இந்தியாவில் ஜனநாயக ஆட்சி தவழ்கிறது என்று பேசுவதோ, பேச்சு உரிமை எழுத்து உரிமை சிந்தனை உரிமை முதலியன இந்திய மக்களுக்கு உண்டு என்று கூறுவதோ முற்றிலும் பைத்தியக்காரத்தனமே தவிர வேறில்லை."

பாட்ன நகர முன்னள் ஹைகோர்ட் நீதிபதியும், காங்கிரஸ் இயக்கத்தில் முன் ஓர் சமயம் சிங்க ஏறு என வீரஉலா வந்த மாபெருந்தலைவர் சித்தரஞ்சன தாஸ் அவர்களின் சகோதரரும் ஆகிய அறிஞர் பி. ஆர். தாஸ் அவர்கள், சென்னையில் சென்ற திங்கள் நடைபெற்ற அகில இந்திய பிரஜா உரிமை மாநாட்டிற்குத் தலைமை தாங்கியபோது இவ்வளவு காரசாரமாகக் கண்டித்திருக்கிருரே தேசபக்தர்களின் ஆட்சி விசித்திரத்தை! இந்த வீர உரையை எடுத்துக்காட்டி ஏளனம் செய்யுமே போர்ச்சுகல் சர்க்கார்! அப்போது என்ன பதில் கூறுவர் இந்திய ஆட்சியாளர்கள்!

"உன் ஆட்சியில் ஜனநாயகம் படும்பாடு இதுவாய் இருக்க என் ஆட்சியைப் பற்றிப் பேச முன் வந்துவிட்டாயே, ஊருக்கு உபதேசம் என்பது இதுதான தோழா" என்று கிண்டல் பாணம் தொடுக்குமே போர்ச்சுகல் ஆட்சிப்பீடம்!

அப்போது என்ன பதில் கூறுவர் இந்தப் பாரத புத்திரர்கள்?

என்ன பதில் கூறுவர்?

உரிமைக் குரலை நாடெங்கும் சித்திரவதை செய்துவிட்டு கோவா மக்களின் உரிமைக்குப் பரிந்து பேசினல் யார் மதிப்பார்கள் அதை?

யார் மதிப்பார்கள்?

ஓயாமல் ஒழியாமல் ஜனநாயகத்திற்குக் கல்லறை தேடும் திருப்பணியிலே ஈடுபட்டவண்ணம், ஜனநாயகக் காவலர்கள் நாங்களே என்றல் யார் அதை நம்புவார்கள்? யார்?

நாங்கள்தான் உரிமைக்குப் போராடும் உத்தமர்கள் என்று, ஏறக்குறைய 4000 பேரை விசாரணையின்றியே காராக் கிருகத்தில் பூட்டிவைத்திருக்கும் இப் பூமான்கள் கூறினல் உலகம் எப்படி நம்ப முடியும் அதை?

எப்படி முடியும்?

விடைகூறட்டும் வீர ஜவஹர்—கீ ஜே என்று ஜெயஜெய கோஷம் போடும் "ஜே ஹிந்த்"கள்!

அடுத்த இதழ் முதல்!

1. "போர்வாள்" 16-பக்கங்களுடன் வெளிவருகிறது. விலையில் மாற்றம் இல்லை.
2. "இளவரசி" தொடர்ந்து வெளிவருகிறது.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

...தற்கு ஏன் இத்தனை அலங்காரம் என்று நான் முதலில் வியப்படைந்தேன். அது கிடக்க. தனது தந்தையோடு உலாவச் செல்லும் அந்தப் பெண் ஏன் அப்படி கலகலப்பாயிராமல் முகத்தைத் தொங்கப்போட்டுக்கொண்டு ஏதோ கிலி பிடித்தது போல் நடக்கிறாள்? நாங்கள் திருப்பதிக்குச்சென்று ஒருமாத காலமாக அன்றாடம் அவர்கள் உலாவச் செல்வதைப் பார்த்துக்கொண்டுதானிருக்கிறோம், ஒரு நாளாவது அவள் லேசாக சிரித்ததைக்கூட நாங்கள் காணவில்லை. அதற்குக் காரணம் எதுவாயிருந்த போதிலும், பார்ப்பன ஜாதியில் புத்தி அறிந்த தனது மகளை மற்றவர்களைப்போல் வீட்டில் போட்டு அடைத்து வைக்காமல் வெளியே அழைத்துக்கொண்டு போகும் ஒரு தந்தை முன்னேற்றக் கருத்துடையவர் போலும் என்று நாங்கள் மகிழ்ந்தோம்,

* * *

ஒருநாள் மாலை நானும் என் தங்கை நீலாவும் எங்கள் வீட்டின் ...றந்தலையான மேல் மாடியில் நின்றுகொண்டு அந்தமாக வீசும் மந்தமாருதத்தை நுகர்ந்துகொண்டிருந்தோம். சரியாக ஐந்தரை மணிக்கு எதிர் வீட்டிலிருந்து தந்தையும் மகளும் வெளியே வந்தார்கள்.

"அப்பனும் மகளும் உலாவச் செல்லும் அழகைப் பார்த்தாயா, நீலா" என்றேன் என் தங்கையை நோக்கி.

"பாட்டனும் பேத்தியுந்தானே அக்கா சொல்கிறாய்"

"என்னடி முட்டாள், நான் அப்பனும் மகளும் என்கிறேன், பாட்டனும் பேத்தியும் என்கிறாய், நீ"

"எதிர்வீட்டு 'ஷோக்' ஐயங்கார் சாமியைத்தானே அக்கா சொல்கிறாய்?"

"சாக்ஷாத் அவரையேதான் சொல்கிறேன்"

"பின் என்னவாம். அவர்கள் பாட்டனும் பேத்தியுமாயிராமல் வேறு எப்படியிருக்க முடியும்?"

"என்னடி உளறுகிறாய். நாற்பது வயதுடைய ஒரு மனிதனுக்கு இவ்வளவு பெரிய பேத்தி எப்படி இருக்க முடியும்."

"ஓகோ, நாற்பது வயதா, ஐயோ, பாவம், குழந்தை, வாயில் விரல் வைத்தால் கடிக்கமாட்டார்......நீ என்ன வேண்டுமானாலும் சொல், அக்கா, உனக்கு வெளுத்ததெல்லாம் பால், கறுத்ததெல்லாம் தண்ணீர்! அவருக்கு ஐம்பத்தைந்து வயதுக்கு ஒரு நாள்கூடக் குறையாது. பந்தயம் வைக்கிறேன், என்ன சொல்கிறாய்."

"என்னடி பாவி, மயிர் கன்னங்கறேலென்று இருக்கிறது, வெள்ளிக்கம்பி ஒன்றாவது காணப்படவில்லை. பல்வரிசை இருபத்தைந்து வயது வாலிபனுக்கிருப்பதுபோலிருக்கிறது. ஐம்பத்தைந்து வயது கிழவனுக்கு இவையெல்லாம் எப்படியிருக்க முடியும்?"

"ஓ, அதெல்லாம் வெறும் 'மேக் அப்,' அக்கா?"

"போடி குறும்புக்காரி" என்று சொல்லி நான் கீழே இறங்கிவிட்டேன்.

நீலா எப்போதுமே இடக்காகத்தான் பேசுவாள். அவள் பேச்சுக்கு நான் அதிக மதிப்பு வைப்பதில்லை.

* * *

இரண்டு வாரங்கள் கழிந்தன. திருப்பதியில் மஹாவீர் டாக்கீஸ் என்னும் ஸினிமாக் கொட்டகையில் கண்ணகி படம் ஓடிக்கொண்டிருந்தது, சென்னையிலும் அந்தப் படத்தை நான் பார்க்காததனாலும், திருப்பதிக்கு வந்து ஆறு மாதங்களாகியும் ஒரு பேசும் படத்தையாகிலும் பார்க்காததனாலும், கண்ணகிக்குப் போவதென்று தீர்மானித்து, நாங்களெல்லாரும் புறப்பட்டு ஐந்தரை மணிக்கெல்லாம் கொட்டகை வாயிலில் போய் நின்றோம், காட்சி ஆறேகால் மணிக்காகையால், இன்னும் டிக்கெட் கொடுக்க ஆரம்பிக்கவில்லை. என்ன அதிசயம்! மலையடிவாரத்துக்கோ, கோயிலுக்கோ போகிறார்களென்று இத்தனை நாள் நாங்கள் நினைத்துவந்த அந்த அப்பனும் மகளும்—நீலா கருத்துப்படி, பாட்டனும் பேத்தியும்—அங்கே வந்தார்கள், பார்ப்பனர் அந்தப் பெண்ணை எங்களோடு இருக்கும்படிச் சொல்லி, டிக்கெட் வாங்குவதற்காக "க்யூ" வரிசையில் போய் நின்றுவிட்டார்.

அந்தப் பெண் நெருங்கிவந்தாள். முன்னமேயே பார்த்துப் பழகியவளாதலால், நான் லேசாகச் சிரித்தேன். அவளும் புன் முறுவல் செய்து, எங்களோடு வந்த ஒரு பெண்ணைக் காட்டி "இவள் யார்?" என்றாள்.

அவள் சுட்டிக்காட்டிய பெண் என் கணவருடைய தமயனாரின் மகள். வெளியூர்களில் எப்படியோ எனக்குத் தெரியாது—சென்னையிலும் அதன் சுற்றுப்புறங்களிலும், ஒரு பெண்ணின் கணவருடைய தமயனார் அப்பெண்ணுக்கு மூத்தார் என்று சொல்வார்கள், ஆகவே, "அவள் என் மூத்தார் மகள்" என்று பதிலிறுத்தேன்.

"அப்படின்னா, நீயும் இளையாளா?" என்றாள் அந்தப் பார்ப்பனப் பெண். அவள் சொன்னது எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. இரண்டு மூன்று நிமிஷங்கள் பேசாமல் வாயடைத்து நின்றேன்.

பார்ப்பனப் பெண் அமைதியைக் கலைத்தாள். ஐயோ பாவம் இளையாள் என்று சொல்லிக்கொள்ள வெட்கமாயிருக்கிறதாக்கும். அப்படித்தானிருக்கும். அது நமது தலைவிதி, என்ன செய்கிறது" என்று சொல்லிச் சிரித்தாள்

"நீ சொல்வது எனக்கொன்றும் விளங்கவில்லையே அம்மா. நான் இளையாளல்லவே. எங்கள் வீட்டுக்கு நான்தான் மூத்த பெண், இதோ என் தங்கை நீலா இவள்தான் எனக்கு இளையாள்"

"நான் அதைச் சொல்லவில்லை. அந்தப்பெண் உமக்கு மூத்தாள் பெண் என்றுதானே சொன்னாய். அப்படின்னா அவள் அப்பாவுக்கு நீ இளையாள்தானே" என்று மறுபடியும் அவள் சிரித்தாள்.

ஒரு கணத்தில் எனக்கு எல்லாம் விளங்கிவிட்டது. நெருப்பை மிதித்தது போன்ற உணர்ச்சி ஏற்பட்டு, என்னைத் தூக்கி வாரிப்போட்டது. நீலா வாய்விட்டுக் கொல்லென்று சிரித்துவிட்டாள். விஷயம் இதுதான். பார்ப்பனர்களுக்குள் ஒருவனுடைய முதல் மனைவியை மூத்தாள் என்றும் இரண்டாம் மனைவியை இளையாள் என்றும் சொல்வார்கள். நான் மூத்தார் என்றது அவள் காதில் மூத்தாள் என்று விழுந்தது ஆகவே எனக்கு இளையாள் பட்டம் கட்டிவிட்டாள்.

ஆனால் அதெல்லாம் கிடக்க, நான் மகளென்று கருதியவளும் நீலா பேத்தியென்று கருதியவளுமான அந்தப்பெண் அந்த ஷோக் அய்யங்காருக்கு மனைவியா! எத்தனையாவது மனைவியோ!.

நான் சமாளித்துக் கொண்டு "நான் இளையாளுமல்ல, மூத்தாளு

(9-ம் பக்கம் பார்க்க)

★ போர்வாள் ★

திருவள்ளுவர் ஆண்டு 1980 ஆடி 23
20—8—49 சனிக்கிழமை

உண்மை.

★

ஆம் அதுதான் நம் இருதயகீதம்!

அவன் ஓர் இளைஞன்! கட்டிளங் காளை!

மலர்ந்த முகமும் பரந்த நெற்றியும் ஒளிவீசும் கண்களும் அரும்பு மீசையும் படைத்தவன் — எழில் மிகு தோற்றம் அவன் உருவத்தில் நிழலாடிற்று.

அவனுடைய தோள்கள் ஆற்றலின் உருவங்களாக, அஞ்சாமையின் சின்னங்களாக, உழைப்புச் சக்தியின் உன்னதமான அடையாளங்களாக அழகுற அமைந்திருந்தன.

அவன் ஓர் உழவன்! உழுதொழிலில் ஓரளவு திறமையும் பயிற்சியும் உடையவன். ஆனால் அந்தத் தொழிலிலே அவனுக்கிருந்த திறமையையும் பயிற்சியையும்விட அந்தத் தொழில் வளம்பெற்றிருக்கவேண்டும் என்பதிலே அவனுக்கிருந்த ஆர்வமும் ஆசையும் அதிகம். அந்த ஆர்வமும் ஆசையும்தான், அவனுக்கு, அந்தத்தொழிலிலே திறமையையும் பயிற்சியையும் தந்தது என்றுகூடச் சொல்லிவிடலாம்—அவ்வளவு ஆர்வம் அவனுக்கு உழவுத் தொழிலில்.

அவன் ஒரு கிராமவாசி. ஒருநாள் மாலை, தென்றல் வீசும் நேரம். தன் கிராமத்தை உல்லாசமாகச் சுற்றி வருவது என்று புறப்பட்டான்.

ஊர்க்கோடியில், ஓர் ஒதுக்குப் புறத்தில், ஏராளமான பூமி, வீணாக காலியாய் இருக்கக் கண்டான்.

புறம்போக்கு பூமி. கட்டாந்தரை போன்ற நிலம். ஈரம் என்பது இன்னது என்பதையே அறியாத மண்வெளி.

உழவன் கண்ட இடம் அதுதான்.

பலரும் அந்தப் பூமியைக் கண்டிருக்கின்றனர். செ! இது என்ன கட்டாந்தரை என்று சொல்லிக்கொண்டே சென்றிருக்கின்றனர்.

அவன் கண்டான் —பிறர் கண்டதைப்போலத்தான் அவனும் கண்டான்—ஆனால் இது என்ன கட்டாந்தரை என்று சொல்லிவிட்டு நகர்ந்துபோக அவன் மனம் இடந்தரவில்லை.

அவன் சிந்தனை சுழல ஆரம்பித்தது.

ஊரிலே, உணவுப் பஞ்சம்! நாடெங்கும் அரிசி அரிசி என்ற பஜனை!

ஏன் இந்தக் கட்டாந்தரையை வளம்மிகு வயலாக மாற்றி அமைக்க முடியாது? சிந்தித்துப் பார்த்தான். சிந்தனை உறுதியாக உருமாறிற்று. உறுதி, நாளடைவில் உழைப்பாகப் புதுவடிவம் பெற்றது. ஓயாத உழைப்பின் உருவமானான் இளைஞன்.

"கட்டாந்தரையைக் கழனிக்காடாக்க முயல்கிறான் இளைஞன்"—ஊர்முழுதும் 'சேதி' பரவிற்று.

கேலி பேசினார் பலர். நடக்கிற கதையா இது—வீண் முயற்சி என்று சப்புக் கொட்டினர் பலர். ஆகாத காரியத்திற்கு அம்பாரி கட்டிப் பறப்பட்டனன் என்று பழமொழியில் வளைத்து கிண்டல் அம்பைத் தொடுத்தனர் சிலர்.

"ஏனப்பா இந்த வீண் முயற்சி? கட்டாந்தரை எங்கேனும் கழனிக்காடு ஆகுமா? நாய்வால் நிமிருமா? போப்பா போ!" என்று முதியவர்கள் பலர், இளைஞனை அழைத்து அறிவுரை பகர்ந்தனர்.

இந்த ஆளுக்கு ஏன் இந்தப் பைத்தியம் வந்தது என்று ஊராரில் பலர் தமக்குள் பேசிக்கொள்ளலாயினர்.

கேலி—கிண்டல்—பரிகாசப்பேச்சு—நெஞ்சைப் பிளக்கும் விதமான ஊரார் உரையாடல்-இவ்வளவுக்கு மிடையே, இளைஞன், கரம்பு நிலத் தை விளை நிலமாக மாற்றும் நல் முயற்சியிலே முழு ஊக்கமும் செ லுத்தலானான். பிறர் கேலி அவன் ஊக்கத்தைச் சிதைக்கவில்லை ஊரார் பரிகாசம் அவன் உற்சா கத்தை உருவழிக்கவில்லை. கருமமே கண்ணாயினான் கட்டிளங்காளை.

தினம் தினம் பாடுபட்டான் ஓய்வு ஒழிவு இன்றி உழைத்தான். 'கட்டபாறை'யால் பூமியை பிளந்தான். மண்வெட்டியால் மண் ணைப் புரட்டினான்.

ஆழ இருந்த மண்ணை மேலே கொண்டுவந்தான். மேலே இருந் மண்ணை ஆழக் கொண்டுபோனான்

அப்படியும் இப்படியும் மண் ணைப் புரட்டித் தள்ளினான். இப்ப யும் அப்படியும் 'கட்டப்பாறை யைச் சுழற்றினான். 'கவலை' க யாக தண்ணீரை வாரி இறை தான். தோள் சோகசோகப் பா பட்டு, உள்ளம் களிக்கக் களிக்க பணியாற்றினான்.

'பணி' பலன் தரத் தொடங்கிற் ஊரார் 'கேலி' சிறிது சிறிதாக குறைந்துவரலாயிற்று.

உழைத்து உழைத்து, மலைப் றைபோல் இறுகிக்கிடந்த நிலத்தை வள்ளல்களின் உள்ளம்போல் இ கச் செய்துவிட்டான். ஒரு 'கழ உருவாகிவிட்டது. ஒரு 'வய தோற்றமளிக்கத் தொடங்கிவி டது. காசுக்கும் பயனற்ற கற நிலம் பச்சைப் பசேலெனப் ப விளையும் பூமியாகப் பரிணமிக்க யிற்று.

பருவம் வந்தது—நிலத்தை உ தான்—விதைகளைத் தூவினான் தண்ணீர் பாய்ச்சினான்—மழை பொழிந்தது—வெயிலும் காய்ந் —விதவிதமான ரசாயன எருக்க யும் இயற்கை எருக்களையும் நி தில் கொட்டினான்—எருக்களை ப டுமா, ஓயாத உழைப்பையும் கூ வே கொட்டினான்—ஓராண்டு செ றது—காலம், நல்லதோர் வி ளைவைத் தந்தது-அறுவடை ஜாம்ஜ என நடைபெற்றது.

கேலி பேசினோர், திகைத்து றனர்! கிண்டல்பாணம் தொ தோர் வாழ்த்துமொழிகளை வழ னர், நடக்கிற கதையா என்ற கள் அற்புதம் அற்புதம் என்றன வேறு வேலையில்லையா உனக் வீண்பணி புரிகிறாயே என் விவேக சிந்தாமணி வாசித்தவர் அருமையான வேலை செய்த

தோழா என்று தட்டிக் கொடுத்து தம் மனமகிழ்வைக் காட்டிக் கொள்ளலாயினர்.

மேலும் ஓர் ஆண்டு கடந்தது. கழனி, ஆயிரங் காலத்து வயல் போல அழகுறத் தோற்றமளித்தது. அது ஈராண்டுகளுக்கு முன்னர் ஒரு கட்டாந்தரையாக இருந்தது என்பதை யாராவது சொன்னால் நேரில் கண்டவர்கள் தவிர ஏனையோர் நம்பவே மாட்டார்கள்—அத்தகு புதுநிலை பிறந்துவிட்டது கழனிக்கு!

உழவன் உள்ளம் பூரித்துப் போனான்—தன் உழைப்பின் பலனை உயர்தரமான ஓர் கழனி உருவாகிவிட்டதே என்பதைக் கண்டல்ல—அப்படி உருவான கழனியின் விளைவாகக் கிடைத்த நெல் ஊராரின் உணவுப் பஞ்சத்தைப் போக்குவதற்கு ஓரளவேனும் பயன்பட்டதே என்பதை எண்ணி!

அவன் அடைந்த களிப்புத்தான் எவ்வளவு நியாயமானது! எவ்வளவு அரும்பாடு பட்டபிறகு அந்தப் பெருமகிழ்ச்சியைப் பெற முடிந்தது!

கட்டாந்தரையிலே ஒரு கழனியை உருவாக்குவது பாலைவனத்திலே ஒரு பூஞ்சோலையை நிர்மாணிப்பது போன்ற கடுஞ்செயல்தானே! இந்தச்செயலை அந்த உழவன்தான் கண்டுபிடித்தான் என்பதில்லை. வேறு பலர், பலப்பலர், அவனுக்கு முன்னரே, அவனைவிட ஆயிரம் மடங்கு சிறந்த முறையிலே, அது போன்ற அரும்பணி புரிந்துதான் இருக்கின்றனர். என்றாலும் அதன் காரணமாக அந்தப் பாட்டாளியின் உள்ளம் அடைய வேண்டிய பெருமையும் பூரிப்பும் குறையவேண்டும் என்பது என்ன கட்டாயம்?

* * *

உங்கள் கரத்தால் பூரிப்புடன் ஏந்தப்படும் பெருமையும் உரிமையும் படைத்திருக்கும் இந்தச் சின்னஞ்சிறு ஏடு "**போர்வாள்**", இன்று சற்றேறக்குறைய, அந்த இளம் உழவனின் இன்ப நிலையிலேதான் இருக்கிறது.

உங்கள் அருமைப் "**போர்வாள்**" இதழுக்கு இன்று முதல் **மூன்றுவதாண்டு** தொடக்கமாகிறது.

1947 ஆகஸ்டு 16-ம் நாளன்று, தோற்றமெடுத்து, அடிமேல் அடி வைத்து நகர்ந்து மெல்ல மெல்ல நடந்து, உங்களை வந்தடைந்த உங்கள் பச்சைப் பசுங் குழந்தை, இன்று, இரண்டு ஆண்டுகள் என்ற காலக்கணக்கைப் பூரணமாக முடித்துவிட்டு, முகமலர்ச்சியுடன், புதியதோர் கம்பீரத்துடன், என்றும்போல் சுயமரியாதை ஆர்வம் உள்ளத்தில் அலைமோத, மூன்றுவதாண்டில் அடியெடுத்து வைக்கிறது. ஓர் அடி எடுத்து வைத்துவிட்டு, உங்கள் முகத்தை நிமிர்ந்து பார்க்கிறது, நடடா எம் செல்வக் குழந்தையே என்று நீங்கள் ஆசையுடன் கூறி, கன்னத்தில் அன்புடன் தட்டிக் கொடுக்க வேண்டாமா, அதற்காக! உங்கள் ஆசைதானே, உங்கள் அன்புதானே, உங்கள் இதய பூர்வமான பாராட்டுதலும் வாழ்த்துரையும், ஆசிமொழியும்தானே இந்தச் சிறு குழந்தைக்கு உணவு, உயிர், வாழ்க்கை எல்லாம்! உங்கள் உணர்ச்சி வெள்ளத்தில் சிதறி வீழ்ந்த ஒரு திவலை தானே இந்த ஏடு! உங்கள் பகுத்தறிவுத் தீப்பந்தத்திலிருந்து தெறித்து ஓடிய ஒரு சிறு பொறிதானே இந்தப் பத்திரிகை! உங்கள் அன்பு எனும் தொட்டிலிலே தவழ்ந்து, உங்கள் ஆதரவு எனும் தீம்பாலதனை அருந்தி உங்கள் உற்சாகம் எனும் உடைதனை அணிந்து, தமிழகம் எனும் மைதானத்தில் ஓடி ஆடித் துள்ளிக் குதித்து மகிழ்ந்து உலாவும் மதலைதானே இந்தக் கிழமைத்தாள்! எனவே, இந்த ஏடு, மூன்றுவதாண்டிற் புகுந்திடும் இந்த நன்னாளில், உங்கள் அன்புக் கரத்தாலே தன்னைத் தட்டிக்கொடுக்க வேண்டும் என ஆசைப்படுவதிலே வியப்பென்ன இருக்கிறது!

மூன்றுவதாண்டு! எண்ணிப் பார்க்கிறபோது என்னென்ன எண்ணங்கள் அலைமோதுகின்றன உள்ளத்தில்! 'போர்வாள்' தொடங்கப்பட்டபோது எவ்வளவு இன்னல்! எத்துணை அல்லல்! கேலி பேசினோரும் கிண்டல் பாணங்களைப் பூட்டினோரும் எத்தனை எத்தனைபேர்! இவர்களாவது இந்த ஏட்டைத் தொடர்ந்து நடத்துவதாவது என்று ஐதீகமாண்டி புரிந்தவர்கள் தொகை கொஞ்சமா? அப்பாவும் பிள்ளையுமா ஆசிரியர்கள்—அப்படியானால் கடைசிவரை இணைந்திருந்து பத்திரிகையை நடத்துவார்களா என்பது சந்தேகம்தான் என்று சஞ்சல அந்தாதி வாசித்தவர்கள் என்ன சில பேரா? எத்தனை வாரம் ஓடும் வண்டி—இடையே கவிழத்தான் போகிறது—பார்க்கத்தான் போகிறோம் என்று 'ஜாதகம்' கணித்தவர்களும், இந்த மாதம் நிற்குமா—இல்லை, அடுத்த மாதம் கல்லறை தேடுமா என்று 'ஆரூடம்' பார்த்தவர்களும், பணமுடை என்ற புயல் வீசினால் படகு சாயாமல் என்செய்யும் என்று வாதப்பிரதிவாதம் பேசியவர்களும், கேளப்பா தோழா—இப்படித்தான் புற்றீசல் என ஏடுகள் பல பிறக்கும்—பிறகோ, உலர்ந்த சருகாகும், காலக் கள்ளனால் மிதியுண்டுபோகும் என்று தத்துவ விளக்கம் புரிந்தவர்களும் இல்லாமலா போனார்கள்? உழவன், கட்டாந்தரையை வளவயல் பூமியாக்குவேன் என்று சூளுரை புகன்றுவிட்டு பணி புரியத் தொடங்கிய போது, ஊரார் கேலியையும் கிண்டலையும் அவனுக்குப் பரிசாக வழங்கியதைப் போலத்தான், "**போர்வாள்**", பகுத்தறிவுப் பணி புரிய அஞ்சாத நெஞ்சுடனும் உடைபடாத உறுதியுடனும் புறப்பட்டபோது பலர், பகடி பேசினர். உண்மையிலேயே, பார்ப்பனீயத்தின் இரும்புப் பிடியில் சிக்கிக் கிடக்கும் தமிழகத்தில் பகுத்தறிவுப் பணி புரிவதையே தன் இலட்சிய கீதமாகக் கொண்ட கிழமை இதழ் ஒன்றை நடத்துவது, உழவன், கட்டாந்தரையையே கழனிக்காடாக்க முயன்றதைப் போன்ற கடுஞ்செயல்தான். எனவேதான் இந்தச் செயல் நாலாறு நாட்களுக்குமேல் தொடர்ந்து நடவாது, ஏடு சில பல நாட்களுக்குப்பின் சிதைவது உறுதி என்று பலரும் கருதலாயினர். நமக்கேகூட, இந்த முயற்சி முழுப் பலன்தரும் என்ற நம்பிக்கை தொடக்கத்தில் இல்லாமல்தான் இருந்தது. விளம்பரங்கள் கிடைக்காது—ஆதரவு இருக்காது—பார்ப்பனீயம் மிரட்டும்—அதிகார வர்க்கத்தின் நெற்றிக் கண் நெருப்பு நம் மீது பாயும்—சனாதனச் சழக்கர்கள் நம்மீது சூழ்ச்சி அம்புகள் பல தொடுப்பர்—'வைதீகம்' விதவிதமான மாயா உருவெடுத்து நம்மை வீழ்த்தச் சதி பல புரியும்—நம்மவரும் கைகொடுத்து உதவுவார்கள் என்ற உறுதி இல்லை என்னும் இவ்வளவு உண்மைகளையும் தெரிந்தே

(10-ம் பக்கம் பார்க்க)

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

நாளையதினம் நண்பர் காமராஜரே சென்னை மாகாணத்துப் பிரதம மந்திரியாக வந்து நாடாளும் பொறுப்பை ஏற்கும் நிலைமை நேரிட்டாலும், டில்லி சர்க்கார், ஏதேனும் ஒரு சாக்குக் கூறிவிட்டு, மாகாண மந்திரிசபை—சட்டசபை இரண்டையும் கலைத்துவிட்டு, மாகாண ஆட்சியை தாமே ஏற்றுக் கொள்ள முடியும். காமராஜர் முகத்தில் கரி பூச முடியும். இத்தகைய அதிகாரத்தை டில்லி சர்க்காருக்குத் தரவேண்டும் என்றொரு சட்டம் அரசியல் ஆக்கமன்றத்தில் விவாதத்திற்கு வருகிறது—அதற்குக் காமராஜர்களும் ஓட்டுக் கொடுக்கிறார்கள்! எவ்வளவு பற்று அவர்களுக்கு மாகாண சுயாட்சியின் மீது! எவ்வளவு சுதந்தர உணர்ச்சி ததும்புகிறது அவர்கள் உள்ளத்தில்!! அடா அடா! அற்புதம்!!

சென்ற இரண்டாண்டு காலமாக ஓயாமல் பேசிப் பேசித் தீட்டிக்கொண்டிருக்கிறார்களல்லவா எதிர்கால இந்தியாவின் அரசியல் அமைப்புத் திட்டம், அந்தத் திட்டத்திலேதான், மாகாண சர்க்கார்களை இதுபோல மனம்போனபடி ஆட்டிப்படைக்கும் உரிமை மத்திய சர்க்காருக்குத் தரப்பட்டிருக்கிறது—காமராஜர்களின் கரகோஷத்துக்கிடையே!!

அந்த அரசியல் அமைப்புத் திட்டத்தில், 275, 276, 278, 279, 280 ஆகிய ஐந்து பகுதிகள் இவ்வண்ணம், மாகாண சர்க்கார்களை ஆட்டிப்படைக்கும் சுதந்தரம் மத்திய சர்க்காருக்கு ஏற்படவேண்டும் என்பதற்காகவே இணைக்கப்பட்டிருக்கின்றன.

இந்த ஐந்து சட்டப் பகுதிகளையும் சட்டப் பகுதிகள் என்று கூறுவதைவிட ஜனநாயக வாதிகளின் இதயத்தைத் தாக்கும் ஈட்டி முனைகள் என்று கூறினால் அது மிகப் பொருத்தமாக இருக்கும்—அவ்வளவு கொடுமை குவிந்திருக்கிறது இந்த ஐந்து சட்டங்களில்.

மாகாண சர்க்கார்களின் உரிமைகளை வீழ்த்துவதற்காக மத்திய சர்க்கார் தங்கள் கரத்திலே ஏந்தியிருக்கும் பஞ்ச பாணங்கள் இவை!

பிரிவு 275, 276 ஆகிய இச் சட்டங்கள், போரினாலோ, வெளிநாட்டார் படையெடுப்பாலோ, உள்நாட்டுக் குழப்பம் அல்லது பூசலாலோ, இந்தியா முழுமைக்குமோ அல்லது ஏதேனும் ஒரு பகுதிக்கோ ஆபத்து ஏற்பட்டால், அல்லது ஆபத்து ஏற்படும் என்று கருதினால், இந்தியத் தலைவர் (ஜனாதிபதி) அவசரகாலப் பிரகடனம் பிறப்பிக்கலாம் என்றும், அப்படி, பிரகடனம் பிறப்பிக்கப் பட்டால், அந்தக்காலத்தில், மாகாண சர்க்கார்கள் மட்டுமே பிறப்பிக்கக் கூடிய சட்டங்களை மத்திய சர்க்காரே பிறப்பிக்கலாம் என்றும் தெரிவிக்கின்றன.

போரோ, வெளிநாட்டார் படையெடுப்போ, ஏற்படும்போது, மாகாண சர்க்காரின் அதிகாரங்களை, அவசரகால நிலைமையை முன்னிட்டு மத்திய சர்க்கார் ஏற்றுக் கொள்வதில் அர்த்தமுண்டு. ஆனால் உள்நாட்டுப் பூசல் ஏற்பட்டால்கூட மாகாண சர்க்கார்களின் அதிகாரங்களை டில்லி ஜனாதிபதி ஏற்றுக் கொள்ளலாம் என்று இச் சட்டங்கள் புகல்கின்றன. உள்நாட்டுப் பூசல் என்றால் என்ன என்பதை இந்தச் சட்டங்கள் தெளிவுபடுத்தவுமில்லை. ஆகவே, ஒரு மாகாணத்தில், உதாரணமாக, சென்னை மாகாணத்தில், ஏதேனும் ஒரு சிறு குழப்பம் அல்லது பூசல் ஏற்பட்டால் உடனே அதை ஒரு போலிக் காரணமாகக் காட்டி, மத்திய சர்க்கார், சென்னை மாகாண சர்க்காருக்கென்றே உள்ள சட்டம் தீட்டும் உரிமைகளை தாங்களே எடுத்துக்கொள்ள முடியும். ஒரு குழப்பம் அல்லது பூசல் ஏற்பட்ட பிறகுதான், டில்லி சர்க்கார், இதுபோல மாகாணங்களின் உரிமைகளைப் பறிக்கமுடியும் என்பதில்லை அப்படிப்பட்ட குழப்பம் அல்லது பூசல் ஏற்படக்கூடும் என்று டில்லி சர்க்கார் **நினைத்தாலே போதும்.**

அந்த வெறும் நினைப்பையே ஆதாரமாகக் கொண்டு, அவசரகால நிலைமையைப் பிரகடனம செய்துவிட்டு, மாகாண சுய ஆட்சியை ஒரு கேலிக் கூத்தாக ஆக்கிவிட முடியும் மத்திய சர்க்காரால்!

மத்திய சர்க்காரின் சார்பில், ஜனாதிபதி, இதுபோன்ற உத்தரவைப் பிறப்பித்தால், அது உண்மையில் தவறான கருத்துடனே பிறப்பிக்கப்பட்டிருந்தால் கூட, இந்த உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்று கூறும் உரிமை டில்லி பாராளுமன்றத்திற்குக்கூட கிடையாது. ஏதோ ஒரு மாகாணத்தில் ஏதோ ஒரு பூசல் ஏற்பட்டாலும் ஏற்படலாம் என்று ஜனாதிபதி நினைத்தால் போதும், உடனே அந்த மாகாண சர்க்காருக்குள்ள அதிகாரங்களை மத்திய சர்க்காருக்கு மாற்றிவிட முடியும் அவரால்! ஒரு தனி மனிதரின் வெறும் நினைப்பு ஒரு மாகாண சர்க்காரின் அதிகாரத்தையே குறைக்க முடியும்! எத்தகைய கொடுமையான நிலைமை! ஜனநாயகத்திற்கு எவ்வளவு பெரிய ஆபத்து!

"இந்த சட்டங்களின்படி ஒரு தனி மனிதருக்குத் தரப்பட்டுள்ளதைப்போன்ற இவ்வளவு மகத்தான அதிகாரங்கள், உலகத்தில், வேறு எந்த நாட்டின் அரசியல் அமைப்பிலும் வேறு எவருக்கும் தரப்படவில்லை. எங்கேயாவது எந்த நாட்டின் சட்டத்திலாவது இதற்குக் கிட்டத்தட்ட சமமான அதிகாரங்கள் ஒரு தனி மனிதருக்குத் தரப்பட்டிருக்கிறது என்று சொல்லவேண்டுமானால், அது, ஹிட்லர் ஆட்சிப்பீடம் ஏறுமுன்னால் ஜெர்மனியில் தீட்டப்பட்ட அரசியல் அமைப்புச் சட்டத்தில்தான் என்று சொல்லவேண்டும். ஆனால் அந்த அரசியல் சட்டத்தின்படி தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட மகத்தான விசேஷ அதிகாரங்களைப் பயன் படுத்திக்கொண்டுதான், ஹிட்லர், ஜெர்மன் குடியரசையே சித்திரவதை செய்துவிட்டு, முழு சர்வாதிகார ஆட்சியை ஏற்படுத்தினான் என்பதை நாம் நினைவில் வைத்துக் கொண்டால், இவ்வளவு விசேஷ அதிகாரங்களை ஒரு தனி மனிதருக்குத் தர நாம் முயல்வது எவ்வளவு ஆபத்தானது என்பது நமக்கு நன்றாகப் புலப்படும்." என்று, **தோழர் H. V. காமத்,** டில்லி அரசியல் மன்றத்திலே, இந்தச் சட்டங்கள் விவாதத்திற்குக் கொண்டுவரப்பட்டபோது நன்றாக இடித்துக்காட்டித்தான் பேசியிருக்கிறார். பேசி என்ன பலன்? மத்திய சர்க்கார், "காகம் வெள்ளை நிறம்" என்று கூறினால ஆமாம் நிச்சயமாக என்று கூறும் அறிவுக் கொழுந்துகள்தானே டில்லி அரசியல் மன்றத்தை அலங்கரிக்கின்றன! அப்படிப்பட்ட "அறிஞர் பெருமக்கள்" தோழர் காமத்தின் அறிவுரையைக் கேட்டு, இந்தச் சட்டங்களை எதிர்த்து வோட்டளிப்பார்கள் என்று நாம் எப்படி எதிர்பார்க்க முடியும்? திருவாளர் காமத்தும் பேராசிரியர் கே. டி. ஷாவும், எடுத்துக்கூறிய ஆய்வுரைகளைச் சிறி

தும்கேளாமல், அந்த அரசியல் அமைப்பு அவை உறுப்பினர்கள் சர்வாதிகாரத்தைக் கூவி அழைக்கும் இந்தச் சட்டங்களை நிறைவேற்றித்தான் இருக்கிறார்கள்!

இந்த இரு சட்டப் பிரிவுகளாவது மாகாண சர்க்கார்களின் அதிகாரங்களை மத்திய சர்க்காருக்கு மாற்றித் தருவதோடு தங்கள் திருப்பணியை முடித்துக்கொண்டு விட்டன. ஆனால் 278 என்ற சட்டப் பிரிவு இருக்கிறதே, அந்த சட்டம் மாகாண சட்டசபைகளையும் மந்திரி சபைகளையும் கலைத்துவிட்டு, மாகாணங்களை நேரிடையாகத் தாமே ஆளும் அதிகாரத்தை மத்திய சர்க்காருக்கு அளித்திருக்கின்றன.

போர் வரும்போதல்ல, வெளிநாட்டார் படையெடுப்பு நிகழும் போதல்ல, உள்நாட்டுப் பூசல் ஏற்படும்போதுகூட அல்ல, மாகாண சர்க்கார், இந்திய அரசியல் சட்டத்தில் விதித்துள்ள நடைமுறை ஒழுங்கு முறைப்படி நடக்கவில்லை என்று மத்திய சர்க்கார் கருதினாலே போதும், உடனே, அவர்கள் மாகாண சட்டசபைகளையும் மந்திரி சபைகளையும் கலைத்துவிடலாம். இதுதான் 278!

தங்களுக்கு விருப்பமில்லாத ஒரு கட்சி ஒரு மாகாணத்தில் ஆட்சி புரிகிறது என்று சொன்னால் அந்தக் கட்சியை உடனே ஆட்சிப் பீடத்திலிருந்து விரட்டமுடியும் மத்திய சர்க்காரால்—இந்த 278ன் படி!

எதிர்க்கட்சிகளை அடக்குவதற்கு மத்திய சர்க்காருக்குக் கிடைத்துள்ள அருமையான ஆயுதம்—278!

மாகாணங்கள், தனியாட்சி உரிமை கோரினாலோ, மத்திய சர்க்காரை சில பல பிரச்சினைகளில் எதிர்த்துப் பேசினாலோ, "டில்லி" இட்ட கட்டளையை இட்டது இட்டபடி ஏற்று நிறைவேற்ற மறுத்தாலோ, உடனே, அந்த சர்க்கார்களின் கழுத்தின் மீது, மத்திய சர்க்கார் எனும் மஹாவிஷ்ணு வீசக்கூடிய "சக்கராயுதம்"—278!

மாகாண சர்க்கார்களின் சுதந்தரத்திற்குத் தயாரிக்கப் பட்டுள்ள மரண ஓலை—278!

அந்த மரண ஓலையிலும் தான் கையெழுத்துப் போட்டிருக்கிறார்கள் காமராஜர்கள்! வெட்கம், வெட்கம்!

275, 276, 278—இந்த மூன்று சர்வாதிகார வித்துகளை இந்திய மண்ணிலே ஊன்றியதோடு திருப்தி அடைந்துவிடவில்லை டில்லி சர்க்கார், மேலும் இரண்டு எதேச்சாதிகார சட்டங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள்!

சட்டம் 279: இந்தச் சட்டப்படி, "அவசரகாலப் பிரகடனம்" இருக்கும்போது, எழுத்துரிமை, பேச்சுரிமை, கூட்டம் கூடும் உரிமை, முதலான ஜனநாயக அடிப்படை உரிமைகள் உண்டல்லவா, அவையெல்லாம் முற்றிலும் நிறுத்தி வைக்கப்படும்.

சட்டம் 280: மேற்படி அடிப்படை உரிமைகளை ஆளவந்தார்கள் மீறியபோது, அவர்கள் மீது, உயர் நீதி மன்றத்தில், வழக்குத்தொடுத்து அடிப்படை உரிமைகளை நிலைநாட்டும் உரிமை இப்போது நமக்கு உண்டு. இந்த உரிமையையும் பறிக்கும் சட்டம்தான் 280. இந்த சட்டத்தின் படி, ஜனாதிபதி, அவசர கால சந்தர்ப்பங்களில், வழக்கு மன்றங்கட்கு, இப்படிப்பட்ட ஜனநாயக உரிமை வழக்குகளை விசாரிக்க அதிகாரம் கிடையாது என்று அறிவித்துவிட முடியும். அதாவது நீதிபதி, ஜனாதிபதிக்குக் கட்டுப்பட வேண்டியவராகிறார் இந்தச் சட்டத்தின்படி!

அதிகம் எழுதத் தேவையில்லை. 275—276 — 278—279 — 280—இந்த ஐந்து சட்டப் பிரிவுகளும் இந்தியாவை, சர்வாதிகாரப் பாலைவனத்திற்கு இழுத்துச் செல்கின்றன—ஜனநாயகப் பூந்தோட்டத்திற்கு அல்ல என்னும் உண்மையை, உண்மையை உணர மறுக்கும் ஊராள்வோரைத் தவிர ஏனையோர் அத்தனைபேரும் ஒப்புக்கொண்டே தீருவார்கள்.

சர்வாதிகாரம் எனும் ஆபத்து இந்தியாவை நோக்கி வேகமாக வந்துகொண்டிருக்கிறது — வந்து கொண்டிருக்கிறது என்பதற்கான தெளிவான, திட்டமான, அபாய அறிகுறிகளே இந்த ஐந்து உட்பிரிவுகள்.

இந்த ஆபத்து நிச்சயம் தடுக்கப்பட்டாக வேண்டும். நாட்டு நலனில் அக்கறையுடையோர் அனைவரும் இந்த ஆபத்தைத் தடுப்பதற்கு உடனடியாக முன் வந்தாக வேண்டும்.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

மல்ல. என் கணவருக்கு நான் ஒருத்திதான். ஒருவேளை அவருக்கு முன் நான் இறந்துவிட்டாலும் வேறொருத்தியை நாடுவதில்லையென்று அவர் சங்கல்பம் செய்துகொண்டிருக்கிறார்." என்று நான் சற்று பெருமையடித்துக் கொண்டேன்.

இதற்குள் அந்தப் பார்ப்பனப் பெண்ணினுடைய-தந்தை—இல்லை இல்லை, பாட்டன்-தப்பு தப்பு-கணவன் டிக்கெட் வாங்கிக்கொண்டு வந்து விட்டார். அவரவர்கள் படக்காட்சி பார்க்க கொட்டகைக்குள் சென்று விட்டோம்.

* * *

மறுநாள் தொடங்கி அந்த எதிர் வீட்டுப் பெண் பகற்காலங்களில் எங்கள் வீட்டுக்கு அடிக்கடி வருவாள். என்னிடம் தனித்துப்பேசித் தன் குறைகளையெல்லாம் சொல்லிக்கொள்ள விரும்புவாள், நானும் அவள்சொல்வதையெல்லாம் முகங்கோணாமல் கேட்டுத் தேறுதல் சொல்லியனுப்புவேன். ஒரு நாளாகிலும் அவள் என் வீட்டுக்கு வந்து அழாமலிருந்ததில்லை. அவளுடைய கணவருக்கு அறுபதுவயது! அவள் தனது கணவருக்கு நான்காவது மனைவியாம். அவருடைய முதல் மனைவிக்கு ஒரு பெண்ணும் ஒரு பிள்ளையும்! இரண்டாவது மூன்றாவது மனைவியர் புத்திரப் பேறில்லாமல் இறந்துவிட்டார்கள். முதல் மனைவியின் பெண்ணைக் கட்டிக்கொடுத்தாய்விட்டது. அவள் பெங்களூரில் வாழுகிறாள். பிள்ளை பட்டணத்தில் கல்லூரியிலேயே பி. ஏ. வகுப்பில் படிக்கிறான், அவனைக் கூடியவரையில் திருப்பதிக்கு அழைத்துக் கொள்ளாதிருக்கவே அவர் முயல்வார். அப்படி அவன் வந்துவிட்டாலும், ஏதாகிலும் சாக்குப் போக்குச் சொல்லி அவனை வெளியே அனுப்பிவிடுவார். அதற்கும் மீறி அவன் வீட்டில் தங்கிவிட்டால், அப்பனுக்கும் மகனுக்கும் ஒரே ரகளைதான். அவன் தன் சிற்றன்னை இருக்கும் பக்கம் எட்டிப் பார்க்கக்கூடாது.

தினக்தோறும் நன்றாக அலங்கரித்துக்கொண்டு தம்மோடு உலாவ வரும்படி அந்தப் பார்ப்பனர் அவளைக் கட்டாயப் படுத்துகிறார். அவள் எவ்வளவு மறுத்தும் அவர் கேட்பதில்லை. இந்நிலையில் அவளுக்கு இன்பமேது? சுகந்தான் ஏது?

(அடுத்த இதழில் முடியும்)

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

தான் நாம் போர்வாளைத் தொடங்கினோம். எனவேதான் நமக்குக் கூட, இந்த ஏடு நிலைக்குமா என்ற ஐயம் துவக்கத்தில் தோன்றலாயிற்று. நாலாபுறமும் ஆபத்து—சுற்றுப் புறங்களில் வேலி-தலைக்கு மேல் ஆட்சியாளர்களின் 'கத்தி'—செல்லும் பாதையோ கரடு முரடானது, காட்டு வழி, பகுத்தறிவுப் பாதை, பயங்கரமான மார்க்கம். இந்த நிலையிலே பயணம் இறுதி வரை வெற்றிகரமாக நடந்தேதீரும் என்று யார்தான் உறுதிகூறியிருக்க முடியும்?

பயணம் ஆபத்தானதுதான், செல்ல வேண்டிய பாதையும் பயங்கரமானதுதான், ஆனால் அதற்காக 'போர்வாள்' தான் மேற்போட்டுக் கொண்ட பணியினின்று சிறிதும் பிறழ்ந்ததில்லை, சற்றேனும் மாறியதில்லை. என்ன ஆகுமோ, வழியில் ஏது நேருமோ என்பதை எண்ணிப் பயணத்தைக் கைவிட்டதில்லை, தொடக்க நாளிலிருந்து இன்று வரை அச்சம் அணுவளவும் ஏற்பட்டதில்லை "போர்வாள்" இதழுக்கு!

"தம்பி! பயங்கரமான பாதை! கரடு முரடான மார்க்கம்! அதன் வழியாக நீ போய்த்தான் ஆகவேண்டுமா?"—ஆம் இதன் வழியாகச் சென்றால் தான் நான் என் இலட்சியபுரியை அடைய முடியும்.

"வேறு பாதைகளே கிடையாதா நீ போக? இது ஒன்றுதானா உனக்குள்ள வழி?" — பாதைகள் வேறு பல உண்டு. ஆனால் அவற்றின் வழியாகச் சென்றால் ஆநந்தபுரியை அடைந்து அலங்கார புருஷர்களாக உலவமுடியுமேதவிர, இலட்சியபுரியை அடைந்து புத்துலக வீரர்களாகத் திகழ்தல் இயலாது.

"ஆபத்து எனும் கொடு விலங்குகள் எதிர் நோக்கிப் பாயவருமே?"—தைரியம் எனும் துப்பாக்கி உண்டு என் கரத்தில்! சுட்டு வீழ்த்தத் தெரியும்.

"நள்ளிரவு! கருக்கிருட்டு! நட்சத்திரங்களின் ஒளியைக்கூடக் காணோமே! இந்த நேரத்திலா பயணம்?"—பகுத்தறிவு என்னும் திருவிளக்கு ஒளி வீசுகிறது என் உள்ளத்தில். அந்தப் புனித ஒளி எனக்கு வழி காட்டும்.

"இடிக்காத இடியெல்லாம் இடிக்குமே! கொட்டாத மழையெல்லாம் கொட்டுமே!" — புதர்கள் உண்டு, பதுங்குவேன்! குகைகள் உண்டு ஒதுங்குவேன்!

"முள்ளும் புதரும் வழிநெடுக இருக்குமே?"-கல்வி என்னும் வாளுண்டு கரத்தில்! வெட்டி வீழ்த்திவிட்டு பாதையைச் செப்பனிட்டுக் கொள்ளுவேன்.

"சனாதனக் கருநாகம் சீறினால்...?"—வெட்டு ஒன்று துண்டு இரண்டு ஆக்குவேன்.

"இவ்வளவு கூறியும் அச்சம் ஏற்படவில்லையா உனக்கு?" அச்சம், உண்மை வீரனுக்கு அறிமுகமாகாத ஓர் பண்பு ஆயிற்றே!

"ஆபத்து இவ்வளவு என்பது தெரிந்தும் போகத்தான் போகிறாயா?" ஆம்! போகத்தான் போகிறேன்! நிச்சயமாக! ஆபத்து எதிர்நோக்கி வரும் என்பதற்காக கடமையைச் செய்ய மறுப்பவன் கோழை அல்லவா?

"தம்பி, நீமேற்போட்டுக் கொண்டுள்ள பணி ஆபத்தானது, இடர் மிகுந்தது, இன்னல் பல தருவது, வேண்டாம் இந்தப் பயணம், நிறுத்தி விடுக" என்று நண்பர் பலர் "அறிவுரை" வழங்கியபோது, வழியில் உள்ள ஆபத்துகளை அன்னார் அடுக்கடுக்காக எடுத்துக் காட்டியபோது, வைதீக வேங்கைகள் வால்சுழற்றிப் பாய வருமே—சனாதனக் கருநாகங்கள் சீறியெழுந்து உயிரைக் குடிக்க ஓடிவருமே—ஏன் இந்தப் பொல்லாப்பு, எதுக்கு இந்த வீண் தொல்லை என்றெல்லாம் அவர்கள் அன்புடன் ஆய்வுரை கூறியபோது, "**போர்வாள்**", புன்முறுவல் பூத்தவண்ணம், மேலே பொறித்துள்ள முறையில் விடை கூறிவிட்டு, பயணத்தைத் தொடர்ந்து நடத்தி வந்திருக்கிறதே தவிர, ஒருபோதும் தன் பயணத்தை நிறுத்திக் கொண்டதோ, பயணத்தின் வேகத்தைத் தளர்த்திக் கொண்டதோ கிடையாது.

தொடங்கப்பட்ட நாளிலிருந்து இன்றுவரை, "**போர்வாள்**," திராவிடர் கழகத்தின் எழுச்சிக் குரலாகவும் மாணவர் இயக்கத்தின் முரசொலியாகவும் இருந்து, திக்கெட்டும் தன்மான முழக்கத்தை எழுப்பிவந்திருக்கிறது. அறியாமை இருளை ஓட்டுவதிலும், விஞ்ஞான ஒளியைப் பரப்புவதிலும், வைதீகப் பித்தனை மாய்ப்பதிலும், புரட்சி ஆர்வத்தை மக்களுக்கு ஊட்டுவதிலும் "போர்வாள்" இந்த இரண்டாண்டு காலமாகத் தளராமல் பணி புரிந்திருக்கிறது. ஆளவந்தார்களின் ஆணவச் செயல்களை இடித்துக் காட்டுவதிலும், பழமைவிரும்பிகளின் பந்தாப்பசலித் தனத்திற்குச் சாவுமணி அடிப்பதிலும், அர்த்தமற்ற சடங்கு சம்பிரதாயம் எனும் கோட்டை கொத்தளங்களை இடித்துத் தகர்ப்பதிலும் 'போர்வாள்' ஆற்றிவரும் பணி நாடறிந்த ஒன்று. திராவிடர் கழகக் கொள்கைகளையும், சுயமரியாதை இயக்கத் தத்துவங்களையும் நிரல் நிரலே விளக்கிக் காட்டி, அவற்றின் சிறப்பை—செம்மையை—உயர்வை—உன்னதத்தை—ஒப்பற்ற மேம்பாட்டை இணையற்ற போராற்றலை நாட்டு மக்கட்கெல்லாம் இனிய முறையில் எடுத்தோதி வந்திருக்கிறது "போர்வாள்" இன்றையதினம், திராவிடப் பெருங் குடிமக்கள் அனைவருடைய உள்ளத்திலும், திராவிடர் கழகம், என்றும் அழியாத தன் அன்பு முத்திரையைப் பொறித்துவிட்டது என்றால், அவ்வண்ணம் கழகத்திற்கு மகத்தானதோர் செல்வாக்கும் சக்தியும் ஏற்படுவதற்காக ஆற்றப்பட்ட அரும்பெரும் பணியிலே, போர்வாளுக்கு, சிறந்ததோர் பங்குண்டு என்பதை எவரும் மறுக்கமுடியாது. எங்கெங்கே கழகத்திற்கு எதிர்ப்பு ஏற்பட்டதோ எங்கெங்கே தூற்றல் அந்தாதியும் சுடுசொல் பாணமும் கழகத்தின் மீது வீசப்பட்டனவோ, எந்தெந்த இடத்தில் வர்ணாஸ்ரம விரியன் பாம்புகள் பழமைக்குப் பராக்கு கூறிக் கொண்டிருந்தனவோ, எந்தெந்த வட்டாரத்தில் அறிவின் வளர்ச்சிக்குத் தடையும் சிந்தனையின் பயணத்திற்கு முட்டுக்கட்டையும் போடப்பட்டனவோ, எங்கெங்கெல்லாம் புரட்சி உணர்ச்சி பொசுக்கப்பட்டு சீர்திருத்த ஆர்வம் சிதைக்கப்பட்டு, பொதுவுடைமை கிண்டல் கேலி செய்யப்பட்டு, பு[illegible] வாழ்வு பெறுவதற்கான மார்க்க[illegible] இருட்டடிப்புச் செய்யப்பட்டதோ அங்கெல்லாம் சென்று சென்[illegible] குற்றவாளிகளைக் கரகரவெ[illegible] இழுத்துவந்து, மக்கள் மன்ற[illegible] எனும் கூண்டில் ஏற்றி அவர்க[illegible] மீது குற்றப்பத்திரிகை வாசி[illegible]ருக்கிறது "போர்வாள்" நியாய[illegible]தின் பக்கம் நின்று வாதாட, [illegible]மையின் வளர்ச்சிக்காகப்போரா[illegible] ஏழை அழுதகண்ணீர் கூரியவா[illegible] ஒக்கும் என்பதை மேட்டுக்[illegible] மக்களுக்கு எடுத்துக்காட்டி [illegible] சரிக்க ஒருபோதும் தவறியதி[illegible]

தமிழகத்திற்கு நாம் அளித்துள்ள இந்த வாள்.

இளம் உழவன், கட்டாந்தரையைக் கழனி வெளியாக்க முயன்றபோது கேலி பேசிய குரல்கள், மாஜி கட்டாந்தரை வளமார் வயலாக உருவெடுத்தபிறகு உழவனின் அறிவு ஆற்றல் திறமைகளைப் பாராட்ட முன்வந்தது போலத்தான், நமதுவாள், உறையிலிருந்து உருவப்பட்டபோது, வாளா இது, அல்ல, வெறும் இரும்புத்துண்டு என்று கிண்டல் மொழி வீசியவர்கள், இதுபோது இந்தவாள் அடைந்திருக்கும் புகழையும், பெற்றுவரும் ஆதரவையும், ஆற்றியிருக்கும் பணியையும் கண்டு உண்மையிலேயே பூரிப்பும் எக்காளமும் அடையத் தொடங்கி யிருக்கின்றனர்.

"போர்வாள்" தொடங்கிய பணி இதுபோல பெரும் வெற்றி அளித்ததற்குள்ள ஒரே காரணம், இந்த வாள், எந்தக் காலத்திலும், எந்த நேரத்திலும், எந்த விநாடியிலும், உண்மை, எவர் பக்கம் அல்லது எதன்பக்கம் இருக்கிறதோ, அவர் பக்கம் அல்லது அதன்பக்கம் நின்று போராடச் சிறிதும் தயங்காமல் முன்வந்ததே அதுதான்! உண்மை! ஆம், அதுதான் போர்வாளின் இருதய கீதம். நண்பர்களானாலென்ன, பகைவர்களானாலென்ன, சொந்தக் கட்சியினரானாலென்ன, மாற்றுக் கட்சியினராய் இருந்தாலென்ன, தொண்டர்களாய்இருந்தாலென்ன, மாபெருந் தலைவர்களாக இருந்தால்தானென்ன, யாராயிருந்தாலும் அவர்கள் சொல்லோ செயலோ நாட்டு நலத்துக்கு மாறானவை என்று கண்டபோது அவர்கள் சொல்லையும்செயலையும் கிளர்ச்சித் தீயிலிட்டுப் பொசுக்கிச் சாம்பலாக்குவதற்குத் தயார் கூறி நிற்கும் ஏடு "போர்வாள்". எந்தத் தலைவரை, அது, தன் உயிருக்குயிரான, உத்தமர் என்று கருதி வந்ததோ அதே தலைவர் கட்சியையும் கட்சிக் கொள்கையையும் கட்சித் தொண்டர்களையும் துச்சமென மதித்தபோது தலைவரே செய்தாலும் குற்றம் குற்றம்தான் என்று உரத்த குரலில் உண்மையைக் கூற அது சிறிதும் அஞ்சவில்லை. ஆட்சியாளர்கள் தீமை நெறி வழிப்பட்டபோது, பலம் பொருந்திய அவர்களைக் கண்டித்தால் ஏது நேருமோ என்ன ஆகுமோ என்ற கவலை அணுவளவுமின்றி, அவர்கள் செயல் தகாது தவறு அக்கிரமம் என்றுஇடியோசை எழுப்பத் தவறியதில்லை போர்வாள்! அதேபோல, அவர்கள் நாட்டு நலனை ஓம்பும் நல்ல திட்டங்களைத் தீட்டிய காலை, எதிர்க்கட்சி சர்க்காரிற்றே இவர்களைப் போற்றலாமா என்ற தயக்கம் துளியுமின்றி, அவர்களுக்கு வாழ்த்துரை வழங்கவும் அஞ்சியதில்லை. உண்மை! அது எந்தக் கட்சியிலேஇருந்தாலென்ன யாரிடத்திலே தவழ்ந்தாலென்ன என்பது பற்றிய கவலையே இன்றி அதை அணைத்து மகிழ்வதிலே மட்டற்ற ஆர்வம் கொண்டிருக்கும் ஏடு இந்தப் "போர்வாள்". இவ்வண்ணம், உண்மையின் உருவத்தை உள்ளதை உள்ளபடி சித்தரித்துக் காட்டும் நெஞ்சு உரமும் நேர்மைப் பண்பும் இந்தப் போர்வாளுக்கு இருக்கிறது என்பதை நன்கறிந்த காரணத்தால்தான் இளந்தமிழர் உலகம் இந்த ஏட்டினிடம் இவ்வளவு பற்றும் பாசமும் கொண்டிருக்கிறது. மூன்றுவது ஆண்டில்முதலடியைஎடுத்து வைக்கும் இந்த நல்ல நேரத்தில், போர்வாள், உண்மையிடம் தனக்குள்ள இந்தத் தளராத காதல் என்றென்றும் குறையாது, குன்றாது, என்னும் உறுதியை தன் அன்பர்கட்கெல்லாம் பணிவுடன் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறது.

சென்ற ஆண்டுபோலின்றி இந்த ஆண்டு பெரும்பாலான ஏஜண்டுத் தோழர்கள் மிக நல்லமுறையில் ஒத்துழைத்திருக்கின்றனர். வாசகர்களின் ஆதரவோ நாளும் நாளும் பெருகிக்கொண்டே இருக்கிறது. இளம்எழுத்தாளர்கள் பலர் சிறந்த கட்டுரைகள் பல தீட்டி நமக்குப் பெருந்துணை புரிந்திருக்கின்றனர். சிறப்பாக, நண்பர் இராதாமணாளன் அவர்கள் தேனினும் இனிய அரிய தொடர் கதை ஒன்று தீட்டித்தந்து நமக்கெல்லாம் பெருங்களிப்பை ஊட்டி வருகின்றார். அனைவர்க்கும் நம் அன்பு கலந்த நன்றி.

போர்வாளைத் தொடங்கிய முதல் இதழில்நாம்குறிப்பிட்டதைப்போல "உண்மையை ஒளிக்காது எடுத்துச் சொல்லுவதே நம்து இலட்சியம். அது யாருக்கு எவ்வளவு குமட்டலாய் இருந்தாலும் சரி அதைப்பற்றி நமக்குக் கவலையில்லை. உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுதல், இரட்டுற மொழிதல், ஒன்றுக்கொன்று நேர்முரணான எட்டுக் கருத்தை உள்ளமைத்துச் சொற்றொடர்கள் தீட்டுதல், அதுவும் சரி இதுவும் சரி எல்லாம் சரி என்று வேதாந்த வெற்றுரையாடுதல் முதலிய வழிகள் நமக்குத் தெரியா. அவை நமக்குத்தெரியவேண்டியதேவையுமில்லை. நெஞ்சில் பட்டதைப் பட்டாங்கு உரைக்கும் நேரிய வழி ஒன்றுதான் நமக்குத் தெரியும். அது ஒன்றே போதும். புத்துலகப் பாதையில் தமிழகத்தைச் செலுத்தும் சீரிய பணியை மேற்போட்டுக் கொண்டுள்ள நமக்கு வேறு வழி ஏனோ?"

இந்த ஒரு சில சொற்களோடு "போர்வாள்", தன் மூன்றுவது ஆண்டுப் பயணத்தைத் ,தொடங்குகிறது.

உங்கள் அன்பும் ஆதரவும் என்றும் போல், தேவை. உங்கள் ஏடு வளர உறுதுணை புரியவேண்டியது உங்கள் கடமை என்பதை நாங்கள் எடுத்துச் சொல்லவா வேண்டும்?

ருஷ்ய நாட்டு அழகி !!!

இராதாமணாளன் தீட்டிய அரிய நூல்,

செந்தமிழ் சிரித்து விளையாடும் இனிய நடை—தேன் ஆறு போன்ற கதைப்போக்கு—இன்பமா, துன்பமா, வீரமா, எல்லா உணர்ச்சிகளும் பின்னிக்கிடந்து எழில் பரப்பும் சிறு கதைகள். மூன்று வர்ண அட்டை. அழகிய பதிப்பு.

விலை 0 8 0 தபாலில் 0 9 0

பகுத்தறிவுப் பாசறை

147, பவழக்காரத் தெரு :: சென்னை 1.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

றனவே என்று கூறிக்கதறும் ஒலியின் எதிரொலி!

பார்த்து மகிழ்வதற்காகவோ, பூரித்துக் களிப்பதற்காகவோ வரையப்பட்ட சித்திரம் அல்ல இது! நாட்டு மக்களின் உயிருக்கு உயிரான உரிமைகள் பறிபோவதைக்கண்டு நல்லறிவாளர்கள் அனைவரும் இந்தியா எங்கே போகிறது — சர்வாதிகாரப் பாதைக்கா என்று மனமுடைந்து கேட்கிறார்களே அந்தக் கேள்வியின் வடிவம்!

ஆம்! இந்தப் படம் உண்மையிலேயே ஒரு படமல்ல! இது ஓர் அபாய அறிகுறி! ஆபத்தின் சின்னம்! இந்தியாவின் எதிர்காலம் எவ்வளவு இடர் மிகுந்ததாகவும் இருள் நிறைந்ததாகவும் இருக்கும் என்பதற்கானஒரு முன்னறிவிப்பு!

சர்வாதிகார மண்டலத்தை நோக்கி இந்தியாவை வேக வேகமாக இழுத்துச்செல்கிறார்கள் இன்றைய ஆட்சியாளர்கள். ஜனநாயகப் பாதையைவிட்டு வழி தவறிச் செல்கிறார்கள். இந்த விபரீத உண்மைகளைச் சித்தரிக்கும் ஒரு சிறு முயற்சியே இந்தப் படம்!

படத்திலே தீட்டப்பட்டுள்ளஆறு சித்திரங்களும், மடமடவென உருவாக்கப்பட்டுவரும் டில்லி ஏகாதிபத்தியத்தின் ஆறுவிதமான படப்பிடிப்புகளேதவிர வேறில்லை.

உண்மையிலேயே, இனி, மத்திய சர்க்கார் மனம் வைத்தால், மாகாண சட்டசபைகள் அனைத்தையும் கலைத்து, சட்டமன்ற மாளிகைகளைப் பூட்டி 'சீல்' வைத்துவிட முடியும் அவர்களால்.

மாகாண சட்டசபைகளைக் கலைப்பது மட்டுமா, மாகாண மந்திரி சபைகளையும் ஒழித்துக் கட்டிவிட முடியும்.

சட்டசபைகளைக் கலைத்து, மந்திரிசபைகளை மட்டந்தட்டி, மாகாண சுயாட்சிக்கு மரண தண்டனை விதிப்பது மட்டுமல்ல, மாகாண கவர்னர்களின் அதிகாரங்கள் அனைத்தையும் பறித்துக் கொண்டு அவர்களை தாங்கள் ஆட்டும் சுட்டு விரல்கண்டு அதன்படி ஆடிடும் கொலுப் பொம்மைகளாக மாற்றி விட முடியும்.

மாகாண மக்கள், தங்களுக்கு வேண்டிய சர்க்காரை தாங்களே தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமையைப் பெற்றிருக்கிறார்களல்லவா இன்று, அந்த உரிமையையும் பறித்துக் கொண்டு, அவர்களை ஆட்சிப் பீடத்தை அசைக்கவும் ஆற்றலற்ற 'ஆட்டுமந்தைகளாக' ஆக்கிவிடமுடியும் மத்திய சர்க்காரால்.

நாட்டு மக்கட்குள்ள சில அடிப்படை உரிமைகளை ஆளவந்தார்கள் அபகரிக்க முயன்றால், அவர்கள் மீது வழக்குத் தொடுத்து நம் உரிமைகளைக் காப்பாற்றிக்கொள்ள "ஹேபியஸ் கார்பஸ்" முதலிய சில சட்டமுறைகள் இருக்கின்றன அல்லவா இன்று, அவைகளையும் துச்சமென ஒதுக்கித் தள்ளிவிட்டு, மாகாண கோர்ட்டுகளை, இத்துறையில், அதிகாரமற்ற வெறும் கூடாரங்களாக ஆக்கிவிடமுடியும் அவர்களால்.

மாகாண சட்டசபை, மாகாண மந்திரி சபை, மாகாண கவர்னர், மாகாண ஹைகோர்ட், மாகாண மக்கள் இத்தனை பேருடைய உரிமைகளையும் ஒரே ஒரு உத்திரவின் மூலம், ஒரேஒருசிறு தாக்கீதின் மூலம் ஒருசின்னஞ்சிறுகட்டளைமூலம், டில்லி தேவதைகளின் ஒரு விரல் அசைப்பின்மூலம்—ஒருகண் சிமிட்டலின்மூலம் ஒழித்துக்கட்டிவிட முடியும். அத்தகைய மகத்தான அதிகாரத்தை, அவர்கள், தங்களுக்கு ஏற்படுத்திக் கொண்டு விட்டார்கள்.

மத்திய சர்க்கார் மனம்வைத்தால் எந்த மாகாணத்தையும், அங்கு நடைபெறும் மாகாண சர்க்காருக்குச் 'சீட்டு'க் கொடுத்து விட்டு, தங்களுடைய நேரடி ஆதிக்கத்தின் கீழ், தங்களுடைய திருப்பாத கமலங்களின்கீழ்க் கொண்டு வந்து சேர்த்துக்கொள்ள முடியும் இனி.

மாகாண சுயாட்சி என்கிறோமே, ஒரு மாகாணம் தன்னைத்தானே ஆண்டுகொள்ளும் உரிமை என்கிறோமே, ஒரு மாகாண மக்கள் தங்களுக்குப் பிடித்தமான அரசியல் கட்சியினரைப் பொதுத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுத்து நாடாளும் பொறுப்பை அவர்களிடம் ஒப்படைக்கமுடியும் என்கிறோமே, இத்தனை சுதந்தர ஏற்பாடுகளையும் டில்லிபுரி ஆட்சியாளர்களின் ஒரே ஒரு பேனாமுனை இடித்துத் தகர்த்து விடமுடியும்.

நாளைபதினம் அல்லது நாளை மறுநாள், பொதுத்தேர்தலில் திராவிடர் கழகம் காங்கிரஸ் கட்சியை முறியடித்துவிட்டு, மாகாண சட்டசபையில் மெஜாரிடி கட்சியாக நுழைகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். நுழைந்து மந்திரி சபையையும் அமைக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள், அமைத்து நாடாளும் பொறுப்பேற்று, நன்முறையில் ஆட்சி செய்துவருகிறது என்றும் வைத்துக்கொள்ளுங்கள். அப்போது, மத்திய சர்க்கார் விருப்பப்பட்டால், ஒரே ஒரு உத்தரவின்மூலம், மந்திரி சபையையும் சட்டசபையையும் கலைத்துவிட்டு, சென்னை மாகாணத்தை நேரடியாக டில்லியிலிருந்து தாங்களே ஆளும் நிலையை உண்டுபண்ண முடியும்—அத்தகு அதிகாரம், சர்வாதிகாரம், எதேச்சாதிகாரம் அவர்களுக்கு ஏற்பட்டு விட்டது.

சென்ற திங்கள், அரசியல் ஆக்கமன்றம், இவ்வளவு அதிகாரங்களை மத்திய சர்க்காருக்கு அளித்திருக்கிறது. அளித்திருக்கிறதா—அல்ல அல்ல—அளிக்கும்படி செய்துகொண்டார்கள் மத்திய சர்க்கார். அரசியல் ஆக்க மன்றத்தில் "கொலு" வீற்றிருக்கும் பிரதிநிதிகளில் இரண்டொருவரைத்தவிர ஏனையோரெல்லாம் "பாரத புத்திரர்கள்" தானே! டில்லி, தாக்கீது பிறப்பித்தால், ஓடோடிச் சென்று அதற்குத் தலை வணங்கும் தர்மப்பிரபுக்கள்தானே அவர்கள்! எனவே, டில்லி, தனக்கு இவ்வளவு அதிகாரங்கள் வேண்டும் என்று கேட்டபோது, அரசியல் அவையினர், ஆஹா! அப்படியே என்று தலை அசைத்ததில் ஆச்சரியம் என்ன இருக்கிறது! காமராஜர்கள் கூடத்தான் அரசியல் ஆக்க மன்றத்திலே உறுப்பினர்களாக இருக்கிறார்கள். இருந்தென்ன பலன்? மாகாண சுயாட்சி உரிமை இவ்வளவு தெளிவாக, குருடரும் காணக்கூடிய முறையில், பறிக்கப்பட்டிருக்கிறது புதிதாகத் தீட்டப்பட்டுள்ள அரசியல் சட்டத்தில்! இந்தச் சட்டம் விவாதத்திற்கு வந்தபோது காமராஜர்கள் தம் முத்தான வாய் திறந்து மூன்று மொழிகூட பேசவில்லை! வாய்மூடி மௌனிகளாக வீற்றிருந்தார்கள்! புண்ணியவான்கள்!!

(8-ம் பக்கம் பார்க்க)

Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar [redacted] Joint Editor, M. Ilancheliyan B.A. (Hons